


# “அம்பேத்கர், பெரியார் வழியில் நடைபோடும் இயக்கம் இது!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க. 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் ஆறாவது அமர்வில் ‘அம்பேத்கர் - பெரியார் வழித்தடத்தில்...’ என்னும் தலைப்பில் எழுத்தாளர் ம.மதிவண்ணன், அவர்கள் ஆற்றிய உரை :**



**ம.மதிவண்ணன்,** எழுத்தாளர்

“இந்த அமர்வில் பங்கெடுப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. ஏனென்றால், இந்த அமர்வில் ஒரு பெண், ஒரு திருநங்கை, சிறுபான்மையினத்தைச் சேர்ந்த ஒருவர், மாற்றுத்திறனாளி ஒருவர், இவர்களுடன் அருந்ததியர் மக்களின் உரிமைக்காகச் செயல்படும் நான் என்று இந்த அமர்வே விளிம்புநிலை மக்களுக்கான அமர்வாக இருக்கிறது.

### ஏன் அறிவுத் திருவிழா?

2022-இல் அண்ணா தி.மு.க.வுக்கு பொன்விழா ஆண்டு. அந்தப் பொன்விழா ஆண்டை அவர்கள் ஒரு வருடம் கொண்டாடினார்கள். என்ன கொண்டாடினார்கள் என்று எவ்வளவுதான் யோசித்துப் பார்த்தாலும், உங்களால் இரண்டு விஷயங்களைத்தான் சொல்ல முடியும். ஒன்று மிட்டாய் கொடுத்தார்கள். இரண்டு, ஊரில் எல்லாம் ரேடியோ செட் வைத்து எம்.ஜி.ஆர். பாடல்கள் போட்டார்கள், அவ்வளவுதான். அதைத் தாண்டி அ.தி.மு.க பொன்விழா நடந்ததற்கு, வேறு ஏதாவது தடயம் இருக்கிறதா என்று பார்த்தால், ஒன்றும் கிடையாது.



ஆனால், தி.மு.க. மட்டும் ஏன் தன் பவளவிழா நிறைவை அறிவுத் திருவிழாவாக நிர்ணயித்து, ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ என்ற முக்கியமான புத்தகத்தை வெளியிட்டு, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு தளங்களில் செயல்படும், எழுத்தாளர்களை கலைஞர்களை, அறிஞர்களை அழைத்து கருத்தரங்கம் நடத்துகிறது?

அம்பேத்கர் மராத்திய மொழியில் நடத்திய ‘பகிஷ்கரித் பாரத்’ பத்திரிகையில் 03.04.1927-இல் ‘தங்களது தலைவிதியின் காரணமாகத்தான் ஒடுக்கப்பட்ட மக்களாகிய தாங்கள் பல்லாண்டு காலமாக இத்தகைய இரங்கத்தக்க வகையில், வாழ்ந்து வருகிறோம், இதிலிருந்து தப்பிக்க வழியே கிடையாது என்று நினைக்கிறார்கள். இதைச் சரிசெய்வதற்கு ஒரே மருந்து அறிவுதான்’ என்று எழுதினார். அதனால்தான் திராவிட முன்னேற்றக்கழகம் தன் பவளவிழா நிறைவை ‘அறிவுத்திருவிழா’வாகக் கொண்டாடுகிறது.

### அவதூறுகள் ஏன்?

நாமெல்லாம் நம்முடைய தலைவர்களை, நம்முடைய கலைஞரை, நம்முடைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நம்முடைய துணை முதல்வரைக் கொண்டாடுகிறோம், வாழ்த்துகிறோம். ஆனால், கலைஞர் இருந்தவரை கலைஞர் மிகவும் அவதூறு செய்யப்பட்டார். கலைஞருக்குப் பிறகு, அந்த இடத்தை நம்முடைய முதல்வர் அவர்கள் பிடித்திருக்கிறார். மேட்டுக்குடியினரால் இந்த அவதூறுகள் தொடர்ந்து முன்வைக்கப்படுகின்றன. ஏன், கலைஞர் மீது, முதல்வர் மு.க.ஸ்டாலின் மீது மட்டும் அவதூறுகள் பொழியப்படுகின்றன?

அண்ணா முதலமைச்சரான உடனே பெரியார், ‘இன்றைக்கு இந்தியா முழுக்க எடுத்துக்கொண்டாலும் ஒரு பகுத்தறிவாளர் ஆட்சியாளராக இருப்பது தமிழ்நாட்டைத் தவிர, வேறு எங்கு இருக்கிறது?’ என்று கேட்டார். அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இன்றைக்கு முதல்வர் ஸ்டாலின் என்று பகுத்தறிவாளர்கள் முதலமைச்சராக இருக்கக்கூடிய நிலை, தமிழ்நாட்டில்தான் இருக்கிறது. இந்த நிலை பார்ப்பனர்களாலோ மேட்டுக்குடியினராலோ ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதனால்தான் தி.மு.க. குறித்து தொடர்ந்து அவர்கள் அவதூறுகளை முன்வைக்கிறார்கள். கலைஞரும் ஸ்டாலினும் அவர்களால் குறிவைக்கப்படுகிறார்கள்.

### தீபாவளி

குறிவைக்கப்படுகிறார்கள் என்று சொல்வதை, நான் ஏதோ மிகைப்படுத்துவதாக சிலர் நினைக்கலாம். நீங்கள் யோசித்துப் பாருங்கள். ஒவ்வொரு தீபாவளி வரும்போதும் தீபாவளி விளம்பரங்கள் வருகிறதோ இல்லையோ, வருடா வருடம் தீபாவளிக்கு வாழ்த்து கேட்டு பிச்சையெடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். தீபாவளி எங்களுடைய பண்டிகை இல்லை. நம் தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான கோயில்கள் இருக்கின்றன. எல்லா கோயில்களிலும் கல்வெட்டுகள் இருக்கின்றன, ‘நாங்கள் இந்த நாளில் அபிஷேகம் செய்தோம்’, ‘இந்த ராஜா அதைச் செய்தார், அப்போது இவர்களெல்லாம் மந்திரிகளாக இருந்தார்கள்’ என்னும் செய்திகளெல்லாம் கல்வெட்டுகளில் இருக்கின்றன. ஆனால், எந்த கோயிலில் தீபாவளியைக் கொண்டாடியதற்கான கல்வெட்டு இருக்கிறது என்று சொல்லுங்கள் பார்ப்போம்.

முதன்முதலில் தீபாவளியைக் கொண்டாடிய கல்வெட்டு, திருப்பதியில் கிடைக்கிறது. 1491-இல் எழுதப்பட்டது அந்தக் கல்வெட்டு. 500 ஆண்டுகளுக்கு முன்னால் மட்டுமே வந்த ஒரு பண்டிகையை ஒரு பகுத்தறிவாளர் தலைமையில் நடக்கக்கூடிய கட்சி எப்படி வழிமொழிய முடியும் என்கிற கேள்வியை, இந்த பொதுச் சமூகத்துக்கு முன்னால் வைக்க வேண்டிய தேவை இருக்கிறது.

### சாதியத்துக்கு எதிரான அரசு

இந்திய சமூகம் என்பது சாதியச் சமூகம். சோழர் காலம், பிரிட்டிஷ் காலம் என்று எல்லாக் காலங்களிலும் அரசுகள் சாதியத்துக்கு ஆதரவாகத்தான் இருந்தன. ஆனால், திராவிட இயக்கம் உருவான பின்புதான், சாதியத்துக்கு எதிரான அரசு வந்தது. அந்த அடிப்படையில்தான் முதன்முதலில் நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்தபோது இந்து சமய அறநிலையத்துறையைக் கொண்டு வருவதற்காக இந்து அறநிலையங்கள் பாதுகாப்புச் சட்டம் என்கிற ஒரு மசோதாவைக் கொண்டு வந்தார்கள்.

1925-இல் பெரியார், ‘இந்த மசோதாவைத் தோற்கடிப்பதற்கு என்னென்ன வேலைகள் உண்டோ பார்ப்பனர்கள், பார்ப்பனர்களுடைய பத்திரிகைகள் எல்லாம் அதைச் செய்து கொண்டிருக்கின்றன’ என்று எழுதியிருக்கிறார். நாம் இன்றைக்கு 2025-இல் பார்க்கிறோம், இன்றைக்கும் ‘கோயில்களை விட்டு வெளியேறுங்கள், பார்ப்பனர்களிடம் கொடுத்துவிடுங்கள், பக்தி மான்களிடம் விட்டுவிடுங்கள், கட்சிக்காரர்களுக்கு அதிலே என்ன வேலை’ என்று சொல்கிறார்கள். எனவே, இந்த யுத்தம் இன்னும் முடியவில்லை.

### உயர்கல்வி வளர்ச்சி

இந்த ஆட்சி பெரியார் வழியில் எப்படி நடக்கிறது என்பதற்கு இரண்டு உதாரணங்களைச் சொல்லலாம். இப்போது, தமிழ்நாட்டில் தொழில் சார்ந்த 9 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. வேளாண்மைப் பல்கலைக்கழகம், பொறியியல் பல்கலைக்கழகம், மருத்துவப் பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம், சட்டப் பல்கலைக்கழகம், விளையாட்டுப் பல்கலைக்கழகம், தோட்டக்கலைப் பல்கலைக்கழகம், மீன்வளப் பல்கலைக்கழகம், கல்வியியல் பல்கலைக்கழகம் ஆகிய 9 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன.

இந்த 9 பல்கலைக்கழகங்களில் 6 பல்கலைக் கழகங்களைத் தோற்றுவித்தவர் நம்முடைய முதல்வர் கலைஞர். அவர் எத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்திருக்கிறார் என்று பார்த்தால், 19 ஆண்டுகள் மட்டுமே ஆட்சி செய்துள்ளார். 19 வருடத்தில் கிட்டத்தட்ட 70 விழுக்காடு பல்கலைக் கழகங்களை கலைஞர் கொண்டுவந்திருக்கிறார். அதே போல இன்றைக்கு தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகள் 172. இதிலே தி.மு.க. ஆட்சியில் மட்டும் 79 கல்லூரிகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அதிலும் முதல்வர் ஸ்டாலின் அவர்களுடைய ஆட்சியில மட்டும் இந்த நான்கரை வருடத்தில் 38 அரசு உதவிபெறும் கல்லூரிகளைத் தொடங்கியிருக்கிறார்கள்.

‘பார்ப்பனர் அல்லாத மக்கள் உயர்கல்வியைப் பெறுவதில் கவனம் செலுத்த வேண்டும்’ என்று அம்பேத்கர் 1924-இல் சொன்னதை 100 வருடங்கள் கழித்தும் ஓர் அரசாங்கம் நடைமுறைப்படுத்திக் கொண்டே வருகிறது என்றால், இன்றைக்கு தமிழ்நாடு இந்தியாவில் பிற மாநிலங்களைவிட, எல்லா அலகுகளிலும் முன்னேறி இருக்கிறது என்றால், தி.மு.க. அரசு, திராவிட முன்னேற்றக்கழகம் என்னும் இயக்கம் அம்பேத்கர் வழியில், பெரியார் வழியில் நடைபோடுகிற கட்சி, ஓர் ஆட்சி என்று சொல்வதில் பெருமைப்படுகிறேன். இந்த ஆட்சியைத் தூக்கிப் பிடிப்பதில் நம் அனைவருடைய ஒத்துழைப்பும் பங்களிப்பும் அவசியம் இருக்க வேண்டும்”

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**‘அறிவுத் திருவிழா : பெரியார், அண்ணா, கலைஞர் வழியில் ஒரு திராவிட எழுச்சி!’ என்ற தலைப்பில் விக்னேஷ் ஆனந்த் எழுதியிருக்கும் முகநூல் பதிவு :**

* தந்தை பெரியார்: பெரியாரின் காலத்தில் ‘அறிவு’ என்பது சாதி, மதக் கட்டுப்பாடுகள் மற்றும் மூடநம்பிக்கைகளைத் தகர்க்கும் கூரிய ஆயுதமாகப் பயன்பட்டது. ‘பகுத்தறிவு’ என்ற ஒற்றைச் சொல்லால் அவர் லட்சக்கணக்கானோரை அறியாமை இருளிலிருந்து விழித்தெழச் செய்தார். சுயமரியாதைத் திருமணங்கள், கடவுள் மறுப்புக் கூட்டங்கள், பெண்ணுரிமைப் போராட்டங்கள் – இவையெல்லாமே அவர் கொண்டாடிய அறிவின் திருவிழாக்கள்தான்.

* பேரறிஞர் அண்ணா: அவர் அந்தப் பகுத்தறிவுக் கருத்தைப் பல லட்சம் மக்கள் பங்கேற்ற இயக்கமாக வளர்த்தெடுத்தார். ‘திராவிட நாடு’ எனும் கோட்பாட்டின் வழியாக, மொழிவாரி மாநில உரிமை, தமிழ்த் தேசிய உணர்வு, சமதர்மம் போன்ற கருத்துகளை இளைஞர்கள் மத்தியில் கொண்டு சேர்த்தார். அண்ணாவின் அடுக்குமொழி மேடைப் பேச்சுகளே அறிவுக் கொண்டாட்டங்களின் உச்சமாக விளங்கின.

* முத்தமிழறிஞர் கலைஞர்: அறிவை ஆளும் அதிகாரமாக உருமாற்றிக் காட்டியவர் கலைஞர். மாநில உரிமைகளை மீட்டெடுத்தல், சமூகநீதி, கல்வி, மருத்துவம், பெண்கள் சம உரிமை, தொழிலாளர் நலன் போன்ற துறைகளில் அறிவின் அடையாளங்களை ஆழமாக நிறுவினார். உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, செம்மொழித் திருவிழாக்கள் – இவையெல்லாம் அவரின் அறிவுப் பற்றை வெளிப்படுத்தியவை.

இன்றைய அரசியல் அரங்கில் அறிவுத் திருவிழா :

தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடந்த இந்த அறிவுத் திருவிழா, பெரியார் – அண்ணா – கலைஞர் ஆகிய மூன்று தலைமுறைகளின் கனவுகளை ஒரே மேடையில் இணைத்தது. புத்தகக்காட்சி, பல்வேறு கலைநிகழ்ச்சிகள், அறிவுசார் கருத்தரங்குகள் என அறிவின் பல்வேறு பரிமாணங்கள் இங்கே காட்சிப்படுத்தப்பட்டன.